**செ. கு. எண்:181** **நாள் :14.07.2013**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 14.7.2013

திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்டங்களில் உள்ள பெரியாறு பாசனப் பகுதியின் முதல் போக பாசனத்திற்கு **வைகை அணையிலிருந்து** தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, வைகை அணையிலிருந்து முதல்போக பாசனத்திற்காக **15.7.2013** முதல் தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், திண்டுக்கல் மாவட்டத்தில் **1,793 ஏக்கர்** நிலங்களும், மதுரை மாவட்டத்தில் **43,248 ஏக்கர்** நிலங்களும் பாசன வசதி பெறும் என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**